Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 153/2022** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW**19 |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | பாண்டி என்ற பால்பாண்டி |
| Father/Husband Name | : | செல்லையா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.08.2024.

<u>(எதிரிகள் 1, 2 மற்றும் 3 ஆஜர்)</u>

முதன்மை விசாரணை:–

நான் இராமநாதபுரம் முல்லை நகரில் வசித்து வருகிறேன். நான் பழவியாபாரம் செய்து வந்தேன். இந்த வழக்கில் இறந்துபோன பனையடியான் என்னுடைய மருமகன். அவர் என் தங்கச்சி மகன். அவர் ஆட்டோ ஓட்டி வந்தார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னுடைய மருமகன் இறந்த மறுநாள் காலைதான் எனக்கு விவரம் தெரியவந்தது. என்னுடைய மருமகனை அடித்துக் கொன்றுவிட்டார்கள் என்று

தகவல் சொன்னார்கள். இது நடந்து சுமார் 3 வருடத்திற்கு மேல் ஆகிறது. இராமநாதபுரம் GH–க்கு சென்று என்னுடைய மருமகனின் உடலைப் பார்த்தேன். பனையடியான் எப்படி, யாரால் தாக்கி இறந்தார் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. (இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

இவ்வழக்கு சம்மந்தமாக இராமநாதபுரம் பஜார் காவல் நிலைய காவல் ஆய்வாளர் 07.03.2021 அன்று என்னை விசாரித்தார் என்றும், 05.03.2021 அன்று மாலை சுமார் 05.00 மணியளவில் அண்ணா சிலை அருகில் நானும், என் தெருவை சேர்ந்த பாண்டி மகன் இளங்கோவும் இடம் சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தபோது அண்ணா சிலை ரோட்டிற்கு அருகில் உள்ள டாட்டா ஏசி ஸ்டாண்ட் அருகில் ரோட்டில் கூட்டமாக இருந்தது என்றும், அப்போது கீழே கிடந்த ஒருவரை 3 பேர் சேர்ந்து கையாலும், அருவாளாலும், சவுக்குக்கட்டையாலும் மாறிமாறி அடித்தார்கள் என்றும், வெட்டினார்கள் என்றும், அந்த நபர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்றும், பாக்கி 3 பேரும் ஆயுதத்துடன் பட்டப்பகலில் நடுரோட்டில் அருவாளால் வெட்டிவிட்டு ஆயுதங்களுடன் சென்றதை பார்த்த பொதுமக்கள் நாலாபக்கம் சிதறி ஓடினார்கள் என்றும், அந்த 3 பேரும் ஆட்டோவில் ஏறி அருவாள் மற்றும் கட்டையுடன் வண்டிக்காரத் தெரு வழியாக சென்றுவிட்டார்கள் என்றும், அங்கிருந்தவர்களும், அந்த வழியாக வந்தவர்களும் இரத்தவெள்ளத்தில் கிடந்தவரை தூக்கி சிகிச்சைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், இதைப்பார்த்த நாங்கள் இருவரும் அந்த இடத்தில் இருந்து கிளம்பி போய்விட்டோம் என்றும், அந்த நபர் இராமநாதபுரம் பெரிய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்றும், அவருக்கும் மஞ்சனமாரியம்மன் கோவிலை சேர்ந்த எதிரி அழகுமலை என்பவருக்கும் ஏற்கனவே ஆட்டோ சவாரி ஏற்றுவதில் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு கடுமையான முன்பகை இருந்து வந்ததாகவும், அந்த முன் பகை காரணமாக 05.03.2021 அன்று பனையடியான் டாட்டா ஏசி ஸ்டாண்டில் தனியாக இருந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எதிரி

அழகுமலையும் அவரது நண்பர்களான கஜேந்திரன் மற்றும் முத்து முருகன் ஆகியோரும் சேர்ந்து பனையடியானை கீழே பிடித்து தள்ளி அருவாளாலும், சவுக்கு கட்டையாலும் அடித்து கொலை செய்துவிட்டதாக விசாரித்து தெரிந்து கொண்டேன் என்றும் ஆய்வாளர் விசாரித்தபோது சொன்னேன் என்றும் தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>– இல்லை.**